Biological Research Station at Krusadai Islands.

* 159 Q.—**Thiru D. SANTOSHAM** : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether there is any proposal to improve the Biological Research Station at Krusadai Islands near **Mandapam**?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: குருசடைத் தீவு கடல் வாழ் உயிரியல் நிலையத்தைச் சீரமைக்கும் உறுதியான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, மண்டபத்தையும் ராமேஸ்வரத்தையும் சுற்றி அந்த மாதிரி எத்தனை தீவுகள் இருக்கின்றன? தமிழக சர்க்கார் அதைக் கணக்கெடுத்ததா? அவை எத்தனை விஸ்தீரணம் உள்ளவை? என்ன வகையில் அவை பயன்படுகின்றன என்ற விவரம் கூற முடியுமா?

4-10 p.m.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக் கேள்வி போட வேண்டும்.

Mr. CHAIRMAN : **Questions** 156 to 158 **will be taken up on Monday**.

Question are over.

[*Note.*—**An asterick (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1969-70—*cont.*

திரு. சா. கணேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிதி நிலை வரவு செலவு அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து விளக்குவதற்கு முன்வருகின்றபோது, சமீபத்திலே தஞ்சைப் பகுதியிலே சுற்றுப்பயணம் புரிந்த நமது மாநில முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் மாணாக்கர்களுக்கு விடுத்த நல்லுரை, அல்லது அறிவுரையை பத்திரிகையிலே படித்து மிகவும் மன ஆறுதலும் மகிழ்ச்சியும் கொண்டேன். இந்த மாதிரியான நல்லுரைகளை வழங்கி அந்த உரைகளுக்கு ஏற்ப மாணாக்கர் உலகம் செம்மையாக, திறமையாகப் பணி செய்து, நெறி வகைகளை வகுத்து. செயல்படுத்துவதற்கு அரசு முறைக்க முன் வரவேண்டும் என்றும் நான் வேண்டிக் கொள்கிறேன். அதோடுகூட, எங்கள் ஊரிலே உள்ள பல கல்லூரிகளிலே, சில மாணாக்கர்கள் முந்தைய தினம், 'பரீட்சை கூடாது, எல்லோரையும் மேல் வகுப்புக்கு அனுப்புங்கள்' என்று கோரிக்கை விடுத்தார்கள். கோரிக்கையை முற்றிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த நிலையிலே ஒரு விழாவிற்கு நிர்வாகத்தின் செயலாளரை அழைத்திருந்தார்கள். செயலாளர் பெண்மணியாக விளங்குபவர். டாக்டர் அழகப்ப செட்டியாரின் திருமகளார். அவரைச் சுற்றி 'கேரோ' பண்ணிக்கொண்டு 'உத்தரவு போட்டால்தான் விடுவோம்' என்று சூழ்ந்து கொண்டார்கள். நான் சொல்ல முடியாது என்று அவர்கள்